# பிரார்த்தனை

PRARTHANAI

CONNEMARA PUBLIC LIBRARY
17 JAN 1950
MADRAS

## தெய்வம்

## பெரியோர்

## தேசம்

## கொடி

BY
Ramalingam Pillai

முகவுரை

**Dr. P. சுப்பராயன் அவர்கள்,**

M. A., D. C. L., L. LD.,

Bar-at-law.

THE S.I.S.S.W.P.S. TIN. LTD.
WITH DRAWN
NO: 14537

பதிப்பித்தோர் :

**V. இராமலிங்கம் பிள்ளை,**

**ஆர்டிஸ்ட், நாமக்கல்.**

பதிப்புரிமை] 1940 [விலை அணா 8

1 JAN 1950

Dr. P. சுப்பராயன் அவர்களுடைய

# முகவுரை

எனது நண்பர் ஸ்ரீ இராமலிங்கம் பிள்ளையவர்களின் தேசிய கீதங்கள் எல்லோரும் நன்கு அறிந்தனவே. அவருடைய தேசத்தொண்டு யாவரும் பாராட்டத் தகுந்தது. நமது பிரதம மந்திரியார் ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் பதினறு வருஷங்களுக்கு முன்னலேயே ஸ்ரீ இராமலிங்கம் பிள்ளையின் தேசத் தொண்டையும் தேசீயப்பாடல்களையும் பாராட்டி, முதல் பதிப்பிற்கு முகவுரை கொடுத்திருப்பது பிரசித்தம்.

இப்போது, நமது பள்ளிக்கூட மாணுக்கர்களுக்கென்றே பொறுக்கான சில பாட்டுகளை இந்தப்பதிப்பில் வெளியிட்டிருக்கிறுர். இந்தப் புத்தகம் நமது மாணவர்களுக்குத் தெய்வ பக்தியையும், தேசாபிமானத்தையும், பாஷாபிமானத்தையும் உண்டாக்க மிகவும் உதவும் என்பது என் நம்பிக்கை. இந்தப் புத்தகத்தை எல்லோரும் ஆதரிப்பார்களென்றே நம்புகின்றேன். அப்படி ஆதரிப்பதனுல் ஸ்ரீ இராமலிங்கம் பிள்ளையவர்களின் சிறந்த தேசத்தொண்டிற்கும் கவித்திறத்துக்கும் செய்யவேண்டிய கெளரவத்தை ஒரு சிறு அளவேனும் செய்ததாகும் என்பதை இந்த முகவுரையால் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருச்செங்கோடு,<br>12—6—38.

ப. சுப்பராயன்.

17 JAN 1950

சக்ரவர்த்தி இராஜகோபாலாசாரியாரவர்களுடைய

# சிறப்புரை

---

என் நண்பர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை இயற்றிய பாடல்களைத் தமிழ் நாட்டி லுள்ள சகோதர சகோதரிகள், படித்தும் பாடி யும் கேட்டும் உள்ளம் கரையுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். அன்பு நிறைந்த தொண்டி லும், பல கலைகளிலும், புதிய நூல்களிலும் தன் நன்மக்கள் வாயிலாக நமதருமைத்தாய் விளங்கி வருகிறாள். தமிழ்த்தாய் பெற்ற நன் மக்களுள் ஒருவராகிய இராமலிங்கம் பிள்ளையின் தேசபக்தியை நான் நன்கு அறிவேன். இராம லிங்கம் பிள்ளையின் பாடல்கள் சிற்சில அம்சங் களில் தேசீயக் கவிச்சக்ரவர்த்தி ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியாருடைய பாடல்களைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்றன. அவர் பாடின இப் பாடல்களைத் தமிழ் நாட்டார் ஆதரித்து அவர் ஊக்கத்தைப் பெருக்கித்தரக் கோருகிறேன்.

சேலம் }
22-10-'22 }

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.

17 JAN 1950
MADRAS



# பிரார்த்தனை

## தெய்வம்

### சிறுவர்களுக்குத் தெய்வம் சொல்லுதல்

இங்கிலீஷ் நோட்

(சங்கராபரணம்—ஆதி)

**ஸ்வரம்**

ஸாகக - ஸாகக - மபமகரி
கமபப - மகரிஸ - ரிஸநிஸா
பாபம - பாபா - தாபமபா
காகா - காகரி - கமகரிஸா

1. சூரியன் வருவது யாராலே
சந்திரன் திரிவது எவராலே?
காரிருள் வானில் மீன்மினிபோல்
கண்ணிற்படுவன அவை என்ன ?
பேரிடி மின்னல் எதனாலே ?
பெருமழை பெய்வது எவராலே ?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி !
அதைநாம் எண்ணிட வேண்டாமோ.

2. தண்ணீர் விழுந்ததும் விதையின்றித்
தரையில் முளைத்திடும் புல் ஏது ?
மண்ணில் போட்டது விதையொன்று
மரம்செடி யாவது யாராலே ?
கண்ணில் தெரியாச் சிசுவையெல்லாம்
கருவில் வளர்ப்பது யார்வேலை ?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லாம்
ஏதோ ஒருவிசை இருக்குமன்றோ !

3. எத்தனை மிருகம் ! எத்தனை மீன் !
எத்தனை ஊர்வன பறப்பன பார் !
எத்தனைப் பூச்சிகள் புழுவகைகள்!
எண்ணத் தொலையாச் செடி கொடிகள் !
எத்தனை நிறங்கள் உருவங்கள் !
எல்லா வற்றையும் எண்ணுங்கால்
அத்தனை யும்தர ஒருகர்த்தன்
யாரோ எங்கோ இருப்பது மெய்.

4. அல்லா வென்பார் சிலபேர்கள்
அரன்அரி யென்பார் சிலபேர்கள்
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்றும் சிலபேர் சொல்வார்கள்
எல்லா மிப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே !

5. அந்தப் பொருளை நாம் நினைத்தே
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப் படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன ?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம் அதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

## பரமன்

### (விருத்தம்)

உலகெலாம் படைத்துக் காத்தே உருவிலா தழித்த நாளும்
உண்மையாய் எண்ண மாளா ஒருவனாய் அருவ னாகிச்
சலமிலா தெண்ணு வோர்க்குச் சத்திய மயமே யாகித்
தனித்தனி பிரித்த போதும் தானதிற் பிரியா னாகி

17 JAN1950
MADRAS



மலரின்மேல் தேவ னாகி மாதொரு பாக னாகி
மாலொடு புத்த னாகி மகம்மதாய் ஏசு வாகிப்
பலபல தெய்வ மாகிப் புற்பல மதங்க ளாகிப்
பக்குவப் படியே தோன்றும் பரமனார் பெருமை போற்றி.

## சக்தி தோத்திரம்

(ஸ்ரீராகம்—ஆதி தாளம்)

### பல்லவி

சக்தி எனக்கே அருள்வாய் பரா
சக்தியென் தாயுனை நித்தமும் தொழுதனன் (சக்தி)

### சரணங்கள்

1. பக்தியோ டுன்றனைப் பணிந்திடல் மறந்தேன்
பாரினிற் சுகமெல்லாம் நீயெனத் தெரிந்தேன்
இத்தின முதலுன்றன் இணையடி புரிந்தேன்
இனிமேற் பிணியில்லை கவலைகள் துறந்தேன் (சக்தி)

2. நோய்களைத் தடுத்திட நண்ணிய அறிவும்
நொந்தவர் தங்களைக் காத்திடப் பரிவும்
மாய்வதைக் குறைத்திட மருந்துகள் முறிவும்
மந்திர தந்திர மணியவை தெரியும் (சக்தி)

3. கல்லினுங் கட்டுடைத் தேகம் எனக்கருள்வாய்
காலனை ஜயித்திடும் கருணையும் தருவாய்
சொல்லினும் செயலினும் தூய்மையைத் தருவாய்
சோம்பலை யோட்டிநற் சுகமெனக் கருள்வாய் (சக்தி)

4. புண்ணிய பாபமென்றன் இச்சையிற் கடந்து
பூதங்கள் ஐந்துமென்றன் சொற்படி நடந்து
எண்ணிய யாவுமென்றன் இஷ்டப்படி முடிய
ஈன்றவ ளேஉன்றன் அருள்வரத் தடையோ (சக்தி)

## கடவுள்

(விருத்தம்)

இல்லாத கால மில்லை இருக்கின்ற பொருள்ஒன் றில்லை
எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணியும் எட்ட வில்லை
சொல்லாத வேத மெல்லாம் சொல்லியும் சொன்ன தில்லை
சூட்டாத நாம மில்லை தோன்றாத உருவ மில்லை
அல்லாவாய்ப் புத்த னாகி அரனரி ப்ரம்ம னாகி
அருளுடைச் சமணர் தேவும் அன்புள்ள கிறிஸ்து வாகிக்
கல்லாத மனத்திற் கூடக் காணாமல் இருப்பா ரந்தக்
கடவுளென் றுலகம்போற்றும்கருணையைக்கருத்தில்வைப்பாம்.

## நெஞ்சொடும் இரங்கல்

(பல ராகங்களிற் பாடலாம்)

(இராகம்: சஹானா—திருபுடை தாளம்)

பல்லவி

ஒருநாளைக் கொருதரம் ஒருநொடிப் பொழுதேனும்
உன்னைப் படைத்தவனை எண்ணிச் சுகித்ததுண்டோ?—மனமே!

அநுபல்லவி

திருநாளும் தேரும்என்று தேடியலைந்ததல்ல
சிந்தனை அலையாமல் தியானத்தில் நிறுத்தியே (ஒரு)

சரணம்

1. விடியுமுன் விழித்தனை வெளுக்குமுன் வீட்டைவிட்டாய்
வெவ்வேறு இடத்துக்கு வெளவால்போல் ஓட்டமிட்டாய்
உடலும் மனமும்சோர்ந்து ஓய்ந்திட வீடுவந்தும்
உண்ணும் பொழுதுங்கூட எண்ணம் நினைப்பதில்லை (ஒரு)

2. அரைக்காசுக் கானாலும் ஒருநாள் முழுதுங்காப்பாய்
ஆயிரம் பேரையேனும் அனுப்பின்றிப் போய்ப்பார்ப்பாய்
உரைப்பார் உரைகட்கெல்லாம் உயர்ந்திடும் செல்வனை
உன்னுள் இருப்பவனை எண்ணிட நேரமில்லை (ஒரு)

3. சிலநாளைக் கதிகாரம் செய்யும் ஒருவர்க்கஞ்சி
செய்யச்சொல் வதையெல்லாம் செய்வாய்நீ பல்லைக்கெஞ்சி
பலநாளும் ஜன்மமெல்லாம் பாலிக்கும் அதிகாரி
பரமனை நினைக்கவும் ஒருகணம் உனக்கில்லை (ஒரு)

4. நாளும் கிழமையென்று நல்லவர் உரைத்தாலும்
'நாளைக்கு ஆகட்டும் வேலை அதிகம்' என்பாய்
பாழும் பணத்தைத்தேடிப் படும்பாடு கணக்கில்லை
பகவானை எண்ணமட்டும் அவகாசம் உனக்கில்லை (ஒரு)

## இறைவன்

(விருத்தம்)

அன்பினுக் கன்பாய் வந்து அறிவினுக் கறிவாய் நின்று
அறிந்தவர்க் கெளிய னாகி அல்லவர்க் கரிய னாகி
முன்பினும் நடுவொன் றின்றி முதுமறை தனக்கு மெட்டான்
மூடர்கள் மனத்திற் கூட மூலையி லொதுங்கி நின்று
செம்பினும் கல்லி னும் செய்தவை யெல்லா மாகிச்
சிலந்திபோற் கூடு கட்டிச் சிறுவையில் மறைந்தான் போல
என்பினுக் கென்பா யென்றும் எம்முளே விளங்கு கின்ற
எழுஞ்சுடர் ஜோதி யான இறைவனை இறைஞ்சி நிற்பாம்.

## இல்லாததுபோல் இருப்பது

(விருத்தம்)

இல்லையென்று சொல்வதற்கும் இருக்கின்ற ஒருபொருளாய்
இருப்பதென்பார் ருசுப்படுத்த இல்லாத தும்அதுவாய்
அல்லவென்று மறுப்பதிலும் அங்கிருந்து பேசுவதாய்
ஆம்என்ற மாத்திரத்தில் அறிந்துவிட முடியாதாய்
வல்லமென்றே அகங்கரித்தால் பலங்குறைக்கும் வல்லமையாய்
வணக்கிஅதைத் தொழுவார்க்கு வலுவில்வரும் பெருந்துணை
[யாய்
சொல்லையொத்துச் செயல்மனமும் தூயவர்க்கே தோற்றுவதாய்ச்
சொல்வதற்கு முடியாத சுத்தசத்தைத் தொழுதிடுவோம்.

## பெரியோர்

(விருத்தம்)

1. 'மடங்கிய பயிர்க ளெல்லாம் மழைவர நிமிர்ந்து நீளும்
மருண்டிடும் குழந்தை பெற்ற மாதினைக் கண்டு தேறும்
ஒடுங்கிய தேகம் தக்க உணவினால் உறுதி கொள்ளும்
ஒளிந்திடும் நாகம் நல்ல ஓசையால் வெளிவந் தாடும்
அடங்கிஇத் தேகந் தன்னில் அவித்தையில் அழுந்தும்ஆன்மா
அன்பின்நல் லுருவ மாய அறிஞரைக் கண்ட போது
முடங்கிய மயக்கம் நீங்கி முன்னைய உணர்ச்சி ஓங்க
மொய்சுடர்க் கொழுந்து போல முடுகிடும் மேமே லன்றோ?

2. அருமறையும் பலகலையும் உலகுக் கீந்தே
அறுசமயப் பலவழியை அடக்கி யாண்டே
உரிமையுடன் பிறநாட்டார் உவந்து போற்ற
ஊழிதொறும் புதிதாகும் உயர்வு தாங்கும்
பெருமைகளைப் பெற்றெடுத்த இந்த நாடு
பெற்றதென நாமடைந்த பெரிய பேறு
மருளகற்றி அருள்சுரக்கும் ஞானந் தோன்றி
மனத்துறவு பூண்டவர்கள் மகிமை யேயாம்.

### ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

(விருத்தம்)

முன்னையோர் நமது நாட்டின் முனிவரர் தேடி வைத்த
முழுமுதல் ஞான மெல்லாம் மூடநம் பிக்கை யென்றும்
பொன்னையே தெய்வ மென்றும் போகமே வாழ்க்கை யென்றும்
மனிதரைக் கொன்று வீழ்த்தும் போரையே வீரமென்றும்
தன்னையே பெரிதா யெண்ணித் தனக்குமேல் இருக்கும் வேறோர்
சக்தியின் நினைப்பே யின்றித் தருக்கியே பிறப்பின் மாண்பைத்
தின்னுமோர் மயக்கம் நீங்கித் தெளிந்திட எழுந்த ஞானத்
தீபமே ராம க்ருஷ்ண தேவனே போற்றி போற்றி.

மனிதரின் பாபம்போக்க மகிழ்ச்சியோ டுயிரைத்தந்த
மாபெரும் த்யாகமூர்த்தி ஏசுவின் அன்பாம்நெய்யைத்
தனிவரும் துறவியென்று தரணியோர் யாரும்போற்றும்
சாந்தனும் புத்ததேவன் தவமெனும் தட்டில்ஊற்றி
இனியொரு மனிதர்க்கில்லை இத்தனை பொறுமையென்னும்
எம்பிரான் மஹம்மத் நீட்டும் சமரசக் கைகள் ஏந்தச்
சினமெனும் அரக்கர்கூட்டம் கிரியென எரியும்ஞானத்
தீபமே ராமக்ருஷ்ண தேவனே போற்றிபோற்றி. (2)

காவியை உடுத்திடாமல் கமண்டலம் எடுத்திடாமல்
காட்டிடை அலைந்திடாமல் கனலிடை நலிந்திடாமல்
பூவுல கதனைச் சுத்தப் பொய்யென்றும் புகன்றிடாமல்
புறத்தொரு மதத்தினோரைப் புண்படப் பேசிடாமல்
சேவைகள் செய்தாற்போதும் தெய்வத்தைத் தெரிவோம் என்று
தெளிவுறக் காட்டினைய்உன் தினசரி வாழ்க்கைதன்னால்
தீவினை இருட்டைப்போக்கிச் செகமெலாம் விளங்கும் ஞான
தீபமே ராமக்ருஷ்ண தேவனே போற்றிபோற்றி. (3)

## மஹாத்மா காந்தி

1. ஏட்டளவிருந்த வேதம் இதுவென எடுத்துக்காட்டி
எழுத்தளவிருந்த கீதம் செய்கையில் ஏந்திநின்று
வீட்டளவிருந்த காதல் விருந்தொடு விரியச்செய்து
விருந்தளவிருந்த நேசம் வியன்பெரு நாட்டிற்காக்கி
நாட்டளவிருந்த அன்பை நானிலம் முழுதும்நாட்டி
நானிலத்தெவர்க்கும் அன்பே நாதனைக்காண்பதென்று
காட்டினைசொல்லாலல்ல ஒழுக்கத்தால் கருணை வாழ்வின்
காந்தியே வீசும்சாந்தக் காந்தியே வருக ஐயா.

2. பக்தியென்றாடுகின்றோம் பஜனையாம் பாடுகின்றோம்
பாகவதமென்றுபல படிப்போம் நித்தம்
முக்தியென்றோதுகின்றோம் மோக்ஷமே பேச்சிலெல்லாம்
மோனமென ஞானமென மொழிவோம் முற்றும்

சத்தியைப் போகவிட்டுச் சக்கையைப்பற்றி வாழ்ந்தோம்
சாத்திரத்தின் சாரமதை உணர்ந்த தக்கோர்
சத்துவதென்றும் மாறா ஒழுக்கத்தின் கருணைவாழ்வின்
காந்தியே வீசும்சாந்தக் காந்தியே வருக ஐயா.

3. நெற்றியில் நீறுநாமம் நிறைந்திடப் பூசியென்ன?
நியமமும் நிஷ்டையென்று நீண்டதால் நேரமென்ன?
பற்றிய ஜபம்செய்மாலைப் பகலிரவிருந்துமென்ன?
பார்த்தவர்மருளும் யோக ஆசனம் பழகியென்ன?
சுற்றிய எவரும் நம்மால் துன்புறாத்தூயவாழ்வும்
தோன்றிய ஜீவரெல்லாம் துணையெனக் கருதுமன்பும்
கற்றனை வாழ்வில் என்றும் காட்டினை கருணைவாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக் காந்தியேவருக ஐயா.

4. அன்புதான் தெய்வம் ஏழைக்கருள்வதே தெய்வபூஜை
முன்பு நாம் மஹம்மத் ஏசு புத்தரும் மொழியக் கேட்டோம்
என்பெலாம் உருக ஏழை எளியவர்க்காக வாழும்
வம்பிலா மார்க்கந் தந்த காந்தியார் வாழ்க வாழ்க.

5. இத்தனை நாள் உலகமெல்லாம் இருந்தறிந்த
பெரியவர்கள் இசைத்த ஞானம்
அத்தனையும் ஒருருவாய்த் திரண்டதென
நம் நாட்டில் அவதரித்தோன்
சத்தியமே மந்திரமாம் சாந்தமொன்றே
தந்திரமாம் சமயம் தந்த
உத்தமனும் காந்திமுனி உச்சரித்த
ஸாத்விகத்தை உறுதிகொள்வாம்.

## தவம்

[மஹாத்மா காந்தியவர்கள் "தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் தனித்தொகுதி கொடுத்து அவர்களை ஹிந்து சமூகத்திலிருந்து பிரித்து வைத்ததை ரத்து செய்தாலல்லாமல் உண்ணாவிரதமிருந்து உயிர் விடுவேன்" என்று, ஆங்கிலேயப் பிரதம மந்திரி ராம்சே

மாக்டனால்டுக்கும், இந்தியா மந்திரி சாமுயேல் ஹோருக்கும் எழுதியிருந்த கடிதங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு, மஹாத்மா விரதம் ஆரம்பிக்கும் முன்னால் பாடப்பட்டவை.]

(விருத்தம்)

1. மனிதர்கள் கடவுளாகார் கடவுளர் மனிதராவார்
புனிதமும் பொறுமையாவும் பொய்யிலா வாழ்வும்பற்றிக்
கனதையும் கருணைபொங்கும் காந்திபோல்வாரைவிட்டு
இனியொரு கடவுளென்பார் எங்குளார்? எங்குளாரே?

2. கடவுளே பொய்யென்றாலும் கண்டவரில்லையென்றாலும்
உடனுலகுயிர் ஒன்றிற்கும் ஒருசிறு தீங்குமெண்ணார்
கடனறி சாந்தக்குன்றாம் காந்திபோல்வாரையன்றி
உடனுயிர் உள்ளார் தம்மில் உவப்பது யாரை? யாரை?

3. நம்பின பேருக்கேனும் நம்புதலற்றார்க்கேனும்
அம்புவி ஏழைக்காக அருந்துயர் அனைத்தும் தாங்கி
வெம்பிய செய்தாருக்கும் வெருவுளஎண்ணார் சொல்லார்
இம்பரின் காந்தி வாழ்வை இல்லையென மறுக்கப்போமோ?

4. ஈரமும் இரக்கம் மட்டும் இருப்பவர் யாரும் எங்கும்
ஓரமும் பொய்யும் நீக்கி உயர்குணம் யாவும் காத்து
யாரொரு சிறியார்க்கேனும் யாதொரு தீங்கும் ஒப்பார்
சீரியர் காந்திவாழ்வைச் சிறப்பியா திருப்பதெங்ஙன்?

5. ஒன்றினை ஒன்றுமாய்த்தே ஒருவரை ஒருவர் வாட்டித்
தின்றுடல் சுகிக்குமிந்தத் தீமைசூழ் உலகந்தன்னில்
தன்றுணைச் சுகங்கள்விட்டுத் தளர்ந்தவர்க்குடலையீந்து
நின்றிடும் காந்திவாழ்வை மறப்பதோ நினைப்பதோதான்.

6. தன்னுயிர் போவதேனும் பிறர்துயர் சகிக்கமாட்டார்
பொன்னுயிர் பொதுமைக்கீந்துப் பொறுப்பது மானமஃதே
இன்னுயிர் மனிதவாழ்வின் ரகசிய மாகுமென்று
உன்னிய காந்திவாழ்க்கை தாழ்ந்ததோ உயர்ந்ததோதான்.

"வாழ்ந்தவர் வாழ்ந்தவாழ்வின் வழியிழி வழக்கத்தாலே
'தாழ்ந்தவர்' என்பார் தம்மைப் பிரிகலேன், பிரித்துவைத்தால்
வீழ்ந்துயிர் விடுவேன்" என்ற காந்தியின் விரதவார்த்தை
போழ்ந்துளங் கலங்கிடாதார் பூமியில்உண்டோ மக்கள் ?

8. 'சத்தியம்' 'சாந்தம்' என்னச் சலிப்புறக் கேட்டதெல்லாம்
பொத்திய உடைஒன் றேடு புறத்தொரு அழகுமின்றி
நித்தமும் தன்பாற்குற்றம் நெருப்பெனக் காய்ந்துநீக்கிச்
சுத்தமாம் காந்தியாகத் தோன்றிடக் கண்டோம் இன்று.

9. 'சாந்தம்' என்றது தானின்று சபர்மதிச் சாலைநீங்கி
ஏந்திய கொள்கைக்காக எரவாடா சிறையிற்றங்கி
பாந்தவர் தாழ்ந்தவர்க்காப் பட்டினியிறப்பேனென்று
ஆய்ந்தவர் அறிவில் என்றும் காந்தியாய் அரசுகொள்ளும்.

10. சத்தியம் வெல்லுமென்றால் தவமதுபலிப்பதானல்
உத்தமன் கடவுளென்ற ஒருபொருள் உண்மையானல்
இத்துறை எங்கள் காந்தி இடருருவண்ணங் காத்து
வைத்திடவேண்டும் இந்த வையகம் வாழ்த்தும் என்றும்.

## கடவுளை அறிந்தவர்கள்

(இராகம் : சுருட்டி—ஆதிதாளம்)

பல்லவி

அவரே கடவுளை அறிந்தவராவார்
அனைவரும் மதித்திடத் தகுந்தவர்ராவர் (அவ)

சரணம்

1. துன்பப்படுவோர் துயரம் சகியார்
துடிதுடித்தோடித் துணைசெயப் புகுவார்
இன்பம் தமக்கென எதையும் வேண்டார்
யாவரும் சுகப்படச் சேவைகள் பூண்டார் (அவ)

2. பசியால்வாடின எவரையும் பார்த்துப்
பட்டினி தமக்கென பரிதபித் தார்த்து
விசையாய் முடிந்ததை விருப்புடன் கொடுப்பார்
வீண்உப சாரம் விளம்புதல் விடுப்பார் (அவ)

3. நோயால் வருந்திடும் யாரையும் கண்டு
நோன்பெனச் செய்வார் எல்லாத் தொண்டும்
தாயாம் எனவே தம்சுகம் எதையும்
தள்ளிவைத் தருகினில் தாமிருந் துதவும் (அவ)

## தேசம்

### இந்தியத்தாய் தோத்திரம்

(ஸ்ரீராகம்—ஆதி)

CONNEMARA PUBLIC LIBRARY
17 JAN 1950
MADRAS

பல்லவி

தாயே வந்தனம்—இந்தியத்
தாயே வந்தனம்.

அநுபல்லவி

தாரணிதன்னில் வேறிலை இணையெனப்
பூரணவளந்திகழ் புண்ணிய பூமியென் (தாயே)

சரணம்

1. நிலவளம் நீர்வளம் நிறைந்ததுன் நாடு
நீண்ட உன் பரப்பினும் வேறிலை ஈடு
விலையிலும் விளைவிலும் மலிந்ததுன் தேசம்
வேண்டிய யாவும்உன் எல்லையில் வாசம் (தாயே)

2. முப்பதும் ஆறும் கோடிஉன் மக்கள்
மூவுலகத்தையும் ஆண்டிடத் தக்கர்
அற்புதமாகிய ஆற்றல்கள் நிறைந்தாய்
அறியாத்தனத்தால் அடிமையில் இருக்தோம் (தாயே)

3. படையெடுத்தவரும் பசியெடுத்தவரும்
பற்பல நாட்டவர் உனையடுத்தவரை
அடைவுடன் அத்தனை பெயரையும் தாங்கி
ஆதரித்தாண்டனை பெருங்குணம் ஓங்க (தாயே)

4. பாஷைகள் பற்பல படித்தவள் நீயே
படித்ததன் பயன்பெறும் நடத்தையுள் ளாயே
ஆசைகள் அகற்றிய அறங்களிற் சிறந்தாய்
அன்பின் வழிகளை அனைத்தையும் அறிந்தாய் (தாயே)

5. ஞானமுங் கலைகளுக் கிருப்பிடமாவாய்
நாகரிகத்தின் பிறப்பிடமாவாய்
தானமுந் தவங்களைத் தாங்கினதுன்கை
தருமம் யாவையும் தழைத்தது மிகவே (தாயே)

6. மதவெறிக் கொடுமையை மாற்றும்உன் பொறுமை
மற்றவர் மதத்தையும் போற்றுமுன் பெருமை
சதமெனும் சத்திய சாந்தியை உரைப்பாய்
சன்மார்க் கத்தவர் சிந்தையில் இருப்பாய் (தாயே)

## இந்தியநாடு என்னுடைய நாடு

(இராகம்: அமீர்கல்யாணி—தாளம்: கண்டஜாதி ரூபகம்.)

1. "இந்திய நாடிது என்னுடை நாடு"
என்று தினந்தினம் நீயதைப்பாடு
சொந்தமில்லாதவர் வந்தவர் ஆளத்
தூங்கிக்கிடந்தது போனதுமாள
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
வாடினகாலங்கள் ஓடின தம்பி
இந்தத் தினம் முதல் "இந்திய நாடு
என்னுடை நாடெ"ன்ற எண்ணத்தைக்கூடு (இ)

2. தன்னுடை வேலையைத் தான் செய்வதாலே
தப்பு வந்தாலும் சுதந்திரம் மேலே
இன்னொரு யாருக்கும் இதிலென்ன கோபம்
என்றன் உரிமைசொன் னலென்ன பாபம்
அன்னியர் ஆள்வதில் நன்மை வந்தாலும்
அடிமையின் வாழ்விது நரகம் என்நாளும்
என்னுடை வீட்டுக்கு நான் அதிகாரி
என்பது தான்சுய ராஜ்ஜிய பேரி (இ)

3. 'முத்தமிழ் நாடென்றன் முன்னையர் நாடு
முற்றிலும் சொந்தம் எனக்' கெனப்பாடு
சற்றும் உரிமையில் லாதவர் ஆளச்
சரிசரி யென்றது போனதுமாள
பக்தியின் அன்பினில் பணிபல செய்வோம்
பயப்பட்டு யாருக்கும் பணிந்திடல் செய்யோம்
சத்தியம் சாந்தத்தில் முற்றிலும் நின்றே
சடுதியில் விடுதலை அடைவது நன்றே (இ)

## கிளிக்கண்ணிகள்

(கூட்டில் அடைபட்டிருக்கும் ஒரு கிளியைப் பார்த்து அதன் விடுதலைக்கு ஒருவழி சொல்லிக்கொடுப்பது போன்றது. இதில் சொல்லப்பட்டிருக்கிற 'கிளி' சாதாரணப் பறவையாகிய கிளியையும் ஒரு மனிதன் அல்லது தேசத்தையும் ஆன்மாவையும் ஒருங்கே குறிப்பது அறிந்து உவக்கத்தக்கது.)

'ஆதி சிதம்பரத்தைக் கிளியே ஆடி வணங்கிக்கொள்ளு' என்ற மெட்டு.

1. ஆதிசுதந்தரத்தைக் கிளியே அடையவழிதேடு
நாதன் திருவருளைக் கிளியே நாடி ஜபம்பாடு
2. இந்தப்பெரும் உலகில் கிளியே இச்சைப்படிபறக்க
சொந்தம் உனக்கில்லையோ கிளியே சொல்லடி வாய்திறந்து
3. தங்கமணிக் கூண்டில் கிளியே தங்கியிருந்தாலும்
அங்கு சுதந்தரத்தின் கிளியே ஆனந்தமேதுனக்கு

4. ஓடியிரைதேடிக் கிளியே உண்பது நீமறந்தாய்
நாடிப்பிறர் கொடுக்கக் கிளியே நாணமின்றிப் புசித்தாய்

5. சொந்தமொழி மறந்தாய் கிளியே சொன்னதுசொல்லுகின்
இந்தவிதம் வாழும் கிளியே இன்பமுனக்கேது [றாய்

6. உன்குலத்தைப்பழிக்கக் கிளியே உத்தரவானாலும் [தாய்
அங்கதுசெய்துடலைக் கிளியே ஆசையுடன்வளர்த்

7. எண்ணமுனக்கிருந்தால் கிளியே எத்தனைநேரமடி
கண்ணைத்திறக்குமுன்னே கிளியே காட்சி சுதந்தரமாம்

8. நல்லவழிசொனுவேன் கிளியே நாடித்தெரிந்துகொள்ளு
அல்லல்வழிவிடுத்துக் கிளியே அன்பின்வழிதேடு

9. சொன்னதைச்சொல்லாதேகிளியே சோறிடஉண்ணாதே
என்ன அழைத்தாலும் கிளியே ஏனென்றும்கேளாதே

10. கொஞ்சிமகிழாதே கிளியே கெஞ்சிப்புகழாதே
அஞ்சிநடுங்காதே கிளியே ஆடிநடிக்காதே

11. கொல்லுவனென்றாலும் கிளியே கொஞ்சமும் அஞ்சாதே
மெல்லுவனென்றாலும் கிளியே மேனிநடுங்காதே [பாய்

12. வெட்டுவனென்றாலும் கிளியே வெற்றரையென்றிருப்
சுட்டிட வந்தாலும் கிளியே சோதனையென்றிருப்பாய்

13. சோதனைக்காலமடி கிளியே சோர்ந்திடுவாயோநீ
வேதனையைப்பொறுத்தால் கிளியே வெற்றியுனதாகும் [த்து

14. இப்படிநீ நடந்தாற் கிளியே எண்ணியெண்ணிப்பார்
ஒப்பி எஜமானன் கிளியே யோசனை செய்வாண்டி

15. காரியம் உன்னாலே கிளியே காசளவில்லையென்று
வீரியம் பேசாமல் கிளியே விட்டிடுவானுனையே

16. கோதிச்சிறகுலர்த்திக் கிளியே கூசாமல் விரித்து
நாதன்புகழ்பாடிக் கிளியே நாற்றிசையும்பறப்பாய்

17. நீண்ட பெருவானம் கிளியே நீயதிலேபறந்து
ஆண்டவன் சன்னதியைக் கிளியே அண்டிச்சுகமடைவாய்

17 JAN 1950
MADRAS

## இந்தியத்தாயின் நிலைக்கு இரங்கல்

(இராகம்:வராளி—தாளம்:ரூபகம்)

### பல்லவி

என்ன உறக்கமடா உனக் கென்ன மயக்கமடா

### அநுபல்லவி

அன்னை படுந்துயர் இன்னு மறிந்திலை
பின்னை அவளுன்னைப் பெற்றுப் பலனென்ன (என்ன)

### சரணங்கள்

1. கட்டத் துணியுமின்றி உண்ணக் கஞ்சி யுணவுமின்றி
நெட்டும் கிழவயதில் அவள் நெஞ்சம் மிகவும்குன்றிப்
பெற்ற வயிறவள் பற்றி யெரிந்திட
முற்றுந் துயரவள் உற்ற சமயத்தில் (என்ன)

2. கண்ணைத் திறந்துமுன்னால் இப்போ தென்ன நடக்குதுபார்
உன்னைப் பரிந்துபெற்றாள் ஒரு பெண்ணைப் பிறர்நகைக்க
ஓவென் றலறியே மேவி யவளுன்னை
ஆவி துடித்திடக் கூவி யழைக்கையில் (என்ன)

## இளந்தமிழருக்கு

(இங்கிலீஷ் நோட் அல்லது வேறு ராகங்களில் பாடலாம்.)

1. அன்பினோடு அறிவுசேர்ந்த ஆண்மைவேண்டும் நாட்டிலே
அச்சமற்ற தூயவாழ்வின் ஆற்றல்வேண்டும் வீட்டிலே
இன்பமான வார்த்தைபேசி ஏழைமக்கள் யாவரும்
எம்முடன் பிறந்தபேர்கள் என்றஎண்ணம் வேண்டுமே
துன்பமான கோடிகோடி சூழ்ந்துவிட்ட போதிலும்
சோறுதின்ன மானம்விற்கும் துச்சவாழ்வு தொட்டிடோம்
என்பதான நீதி யாவும் இந்தநாட்டில் எங்கணும்
இளந்தமிழா! என்றும்நின்று ஏடெடுத்துப் பாடுவாய்.

2. ஓடிஓடி நாட்டிலெங்கும் உண்மையைப் பரப்புவாய்
ஊனமான அடிமைவாழ்வை உதறித்தள்ள ஓதுவாய்
வாடிவாடி அறம்மறந்து வறுமைபட்ட தமிழரை
வாய்மையோடு தூய்மைகாட்டும் வலிமைகொள்ளச் செய்குவாய்
கூடிக்கூடிக் கதைகள் பேசிச் செய்கையற்ற யாரையும்
குப்பையோடு தள்ளிவிட்டுக் கொள்கையோடு நின்றுநீ
பாடிப்பாடித் தமிழின் ஓசை உலகமெங்கும் பரவவே
பார்த்தயாரும் வார்த்தைகேட்டுப் பணியுமாறு சேவைசெய்.

3. தமிழனென்ற பெருமையோடு தலைநிமிர்ந்து நில்லடா
தரணியெங்கும் இணையிலாஉன் சரிதைகொண்டு சொல்லடா
அமிழ்தமென்ற தமிழினோசை அண்டமுட்ட உலகெலாம்
அகிலதேச மக்களுங்கண் டாசைகொள்ளச் செய்துமேல்
கமழ்மணத்தின் தமிழில்மற்ற நாட்டிலுள்ள கலையெலாம்
கட்டிவந்து தமிழர்வீட்டில் கதவிடிந்துக் கொட்டியே
நமதுசொந்தம் இந்தநாடு நானிலத்தில் மீளவும்
நல்லவாழ்வு கொள்ளச்சேவை செய்துவாழ்க நீண்டநாள்.

## தமிழன் பாட்டு

(இராகம்:காம்போதி - தாளம்:ரூபகம்)

பல்லவி

தமிழனென்று சொல்லடா—தலைநிமிர்ந்து நில்லடா (தமிழ)

சரணங்கள்

அமுதமூறும் அன்புகொண்டு அரசுசெய்த நாட்டிலே
அடிமையென்று பிறர்நகைக்க முடிவணங்கி நிற்பதோ!
இமயம்தொட்டுக் குமரிமட்டும் இசைபரந்த மக்கள்நாம்
இனியும்அந்தப் பெருமைகொள்ள ஏற்றயாவும் செய்குவோம் (தமிழ)

குஞ்சைக்காக்கும் கோழிபோலக் குடியைக்காத்த மன்னர்கள்
கோல்நடத்த அச்சமின்றி மேல்நினைப்புக் கொண்டுநாம்
பஞ்சபூத தத்துவங்கள் பக்தியோடு முக்தியைப்
பார்சிறக்கச் சொன்னநாமும் சீர்குறைந்து போவதோ (தமிழ)

உலகிலெங்கும் இணையிலாத உண்மைபாடும் புலவர்கள்
உணர்ச்சிதன்னை வானைத்தாண்டி உயரச்செய்யும் நாவலர்
கலகமற்றுக் களிசிறக்கக் கவிதைசொன்ன நாட்டிலே
கைகுவித்துப் பொய்கள்பாடிக் காலந்தள்ளல் ஆகுமோ (தமிழ)

கங்கையோடு பெருமைகொண்ட காவிரிப்பொன் னாட்டிலே
கவலையின்றிச் சோறிருக்கக் கலைகளெண்ணி வாழ்ந்தநாம்
மங்கிமங்கி வறுமைமிஞ்ச மதிமயங்கி மாய்வதோ!
மாநிலத்தில் சோற்றுப்பஞ்சம் மறையுமாறு மாற்றுவோம் (தமிழ)

சித்திரத்தில் மிகஉயர்ந்த சிற்பநூலின் அற்புதம்
சின்னச்சின்ன ஊரிற்கூட இன்னுமெங்கும் காணலாம்
கைத்திறத்தில் ஈடிலாத கல்விதந்த தமிழர்நாம்
கைநெரித்து வேலையின்றிக் கண்கலங்கி நிற்பதேன்? (தமிழ)

எண்ணமற்று விசனமற்று எங்கும்செல்வம் பொங்கவே
எந்தநாளும் ஆடல்பாடல் எழிலரங்கம் ஓவியம்
பண்ணமைந்த குழலும்யாழும் பக்கமேளம் யாவையும்
பாருக்கீந்து மகிழ்ச்சியின்றி நாமிருத்தல் பான்மையோ! (தமிழ)

விண்மறைக்கும் கோபுரங்கள் வினைமறக்கும் கோயில்கள்
வேறுஎந்த நாட்டிலுண்டு வேலையின் விசித்திரம்
கண்ணிறைந்த காவனங்கள் கனிகள்மிக்க சோலைகள்
கண்டபோது பண்டையெங்கள் நாகரீகம் காட்டுமே (தமிழ)

மனிதவாழ்வில் இன்பமென்று சொல்லுகின்ற யாவையும்
மற்றவாழ்வில் உதவுமென்று நம்புகின்ற ஞானமும்
தனிமையான முறையில்யார்க்கும் தந்தநிந்தத் தமிழகம்
தட்டிடாது தெய்வமின்னும் கிட்டிநம்மைக் காக்குமே (தமிழ)

## எது சுதந்திரம்?

(இங்கிலீஷ்நோட் அல்லது வேறு ராகங்களிற் பாடலாம்.)

1. அச்சம் விட்டது சுதந்திரம்
   அன்பு விடாதது சுதந்திரம்

இச்சைப் படிசெயல் சுதந்திரம்
இடர்செய் யாதது சுதந்திரம்
பிச்சை கொள்ள விரும்பாது
பிறருக் கீய வருந்தாது
கொச்சை மொழிகளைச் சொல்லாது
கோணல் வழிகளிற் செல்லாது (அச்சம்)

2. மடமை விட்டது சுதந்திரம்
மானம் விடாதது சுதந்திரம்
கடமை கற்றது சுதந்திரம்
கபடம் அற்றது சுதந்திரம்
கொடுமை கண்டு பொறுக்காது
கொடியார் தமையும் வெறுக்காது
அடிமை செய்து சுகிக்காது
யாரையும் அடிமை வகிக்காது (அச்சம்)

3 கொல்லக் கூசும் சுதந்திரம்
கொள்கைக் குயிர்தரும் சுதந்திரம்
எல்லை விட்டு நடக்காது
எதிரியை ஒண்டி மடக்காது
வெல்லற் கேனும் பொய்யாது
வேற்றுமைக் காரரை வையாது
பல்லைக் கெஞ்சிப் பிழைக்காது
பட்டதன் தோல்வி ஒளிக்காது (அச்சம்)

4. தன்சோ றுண்பது சுதந்திரம்
தன் துணி யணிவது சுதந்திரம்
என்னை வறுமை வந்தாலும்
எத்துணை துன்பம் நொந்தாலும்
தன்னேர் செம்மை பிரியாது
தன்குறை சொல்லித் திரியாது
பொன்சேர் போகம் மதிக்காது
பொய்ப்புகழ் பாடித் துதிக்காது (அச்சம்)

17 JAN 1950
MADRAS



5. தாழ உரைப்பது சுதந்திரம்
தன்மதிப் புள்ளது சுதந்திரம்
ஏழை செல்வனென் றெண்ணாது
எவருக் குங்குறை பண்ணாது
ஊழிய ருகப் பணிசெய்யும்
உலகுக் கெல்லாம் அணிசெய்யும்
வாழிய மக்கள் எல்லாரும்
வாழிய வென்றே அதுகோரும் (அச்சம்)

## தேசத்தொண்டு

பல்லவி

தேசத் தொண்டுகள் செய்திடுவோம்
தெய்வம் துணைவரக் கைதொழுவோம் (தே)

சரணங்கள்

1. நம்முடை நாட்டை நாம்ஆள
நன்மைகள் முன்போல் இனிமீள
எம்முடை ராஜ்ஜியம் இதுவென்றே
இந்தியர் மகிழ்ந்திடல் சொந்தமென்றால் (தே)

2. பஞ்சக் கொடுமையை ஒழித்திடவும்
பாரத நாடினிச் செழித்திடவும்
அஞ்சும் அடிமைத் தனம்நீங்கி
அன்பின் ஆண்மை வேண்டுமென்றால் (தே)

3. சோறும் துணியும் இல்லாமல்
சோம்பியிங் கெவரும் நில்லாமல்
வீறும் புதுமைப் பொதுவாழ்வின்
விடுதலை யின்பம் வேண்டுமென்றால் (தே)

4. பட்டினி கிடப்பவர் இல்லாமல்
படிக்கா தவரெனச் சொல்லாமல்
எட்டின மட்டிலும் எல்லாரும்
இன்புறும் ராஜ்ஜியம் தென்படவே (தே)

5. இந்தியர் எல்லாம் ஒருஜாதி
யாருக் கும்இங் கொருநீதி
நொந்தவர் ஒருவரும் இல்லாத
நூதன அரசியல் உண்டாக்கத் (தே)

6. ஜாதிக் கொடுமைகள் நீங்கிடவும்
சமரச உணர்ச்சிகள் ஓங்கிடவும்
நீதிக் கெல்லாம் இருப்பிடமாய்
நிற்குமோர் அரசியல் உருப்படவே (தே)

7. வரிகளை யெல்லாம் குறைத்திடவே
வரும்படி விளைவுகள் நிறைத் திடவே
விரிகிற பொதுப்பணச் செலவை யெல்லாம்
வெட்டிச் சிக்கனம் தொட்டிடவும் (தே)

8. பணத்தின் பெருமையைப் போக்கிவைப்போம்
பண்டங் களின்விலை தூக்கிவைப்போம்
குணத்தின் பெருமைகள் இல்லாத
குலமும் பிறஇனிச் செல்லாது (தே)

9. மனிதனை மனிதன் ஏய்ப்பதையும்
மக்களைப் போரில் மாய்ப்பதையும்
தனியொரு வழியில் தடுத்திடஓர்
தருமம் உலகினில் தழைத்திடவே (தே)

10. சத்திய வாழ்வினை நாடுதற்கும்
சாந்தப் பெருமைகள் கூடுதற்கும்
உத்தம காந்தியின் உபதேசம்
உலகுக் கோதும் நம் தேசம் (தே)

11. தாழ்ந்தவ ரென்பவர் இங்கில்லை
தரித்திரம் நமக்கினிப் பங்கில்லை
வாழ்ந்திடும் வரையினும் புகழ்செய்வோம்
வானினும் உயர்வாய் வாழ்ந்திடுவோம் (தே)

## தமிழ்நாட்டுத் தேசியகவி

## ஸ்ரீ சுப்ரமண்யபாரதியார்

(விருத்தம்)

MADRAS PUBLIC LIBRARY
17 JAN 1950
MADRAS

1. அச்சமிகும் பேடிமையின் அடிமை வாழ்வில்
அடங்கியிருந் தறம்மறந்த தமிழர் நாட்டைப்
பச்சைமரத் தாணியெனப் பதியும் சொல்லால்
பாட்டிசைத்துப் பாலர்களும் நிமிர்ந்து நின்று
நிச்சயமெந் தாய்நாட்டின் அடிமை வாழ்வை
நீக்காமல் விடுவதில்லை யெனமுன் வந்து
துச்சமெனச் சுகத்தையெல்லாம் துறந்து நிற்கத்
தூண்டியது பாரதியின் சொல்லே யாகும்.

2. படித்தறியா மிகஏழைக் கிழவ னேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பா னாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்
தொளைமிகுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றென் றார்த்து
அடித்துரைத்தே ஆவேசம் கொள்வா னென்றால்
அப்பாட்டின் பெருமைசொல யாரே வல்லார்.

3. புத்தொளியிற் பழந்தமிழ்க்கோர் புதுமை காட்டிப்
புத்துயிரும் புதுமணமும் புகுத்தி ஞானச்
சத்தியொளி மிகவிளங்கும் சொற்க ளாலே
தாய்நாட்டின் தளையறுக்கும் தவமே பாடி
எத்திசையும் இளந்தமிழர் இன்று கூடி
இறந்தேனும் ஈன்றவளை மீட்போ மென்று
பத்தியொடு அறப்போரில் முனைந்து நிற்கப்
பண்ணினது பாரதியின் பாட்டே யாகும்.

4. எத்தா லும் பணந்தேடி இன்பம் நாடி
உண்டுடுத்து இறப்பதனை இகழ்ந்து தள்ளிப்
பித்தாகித் தான்பிறந்த பரத நாட்டின்
பிணிவீட்டல் ஒன்றினுக்கே பாடிப் பாடி
முத்தாதி மணிகளெனும் சொற்க ளோடு
முப்பழத்தின் சுவைகூட்டி முனிவி லாது
சத்தான வீரத்தின் சாறும் சேர்த்துக்
கவிசமைத்த பாரதியின் தகைமை என்னே!

5. நடித்தொழுகித் துதிபாடி நலங்கள் நாடி
நரைத்திறந்து மறைந்திடும்நா வலர்போ லன்றி
வெடித்தெழுந்த பக்தியொடு பரத நாட்டின்
விடுதலைக்குப் பாடுவதே வெறியாய்க் கொண்டு
இடித்தெழுந்து தேன்பொழியும் சொற்க ளோடு
இளங்கதிரும் முழுமதியும் இணைந்தா லென்னப்
பொடித்துடலம் புளகமுற அச்சம் போக்கிப்
புகழ்புரியும் பாரதியின் புலமை தானே.

6. சோற்றினுக் கறிவைவிற்றுத் தூர்த்தரைப் புகழ்ந்துபாடிச்
சோம்பரைச் செல்வரென்று தொழுதுடல் சுகித்துவாழ்ந்து
கூற்றினுக் குடலம் போகக் குப்பையிற் கவிகள் சேரக்
குறிவிடா திறந்து போகும் கவிகளின் கூட்டம் சேரார்
வேற்றவர்க் கடிமை நீங்கும் விடுதலை வரமே வேண்டி
வீரமும் ஞானம் பொங்கச் சக்தியின் வேள்வி பாடி
நாற்றிசைத் தமிழ ரெங்கும் நாட்டினைப் பணியச் செய்த
நாவலர் சுப்ரமண்ய பாரதி நாமம் வாழ்க.

## நாட்டுக்கும்மி

1. கும்மியடி பெண்கள் கும்மியடி யுங்கள்
கொத்துச் சரப்பணி சத்தமிட
நம்மையெல் லாம்பெற்ற இந்திய நாட்டின்
நன்மையைக் கோரி யடியுங்கடி.

## கடவுள் வணக்கம்

2. புத்தனென் றும்மஹ மத்தனென் றும்ஏசு
நாதனென் றும்மது சூதனென்றும்
நித்த முதித்தருள் நீதி யளித்திடும்
நிர்மல ஜோதியைப் போற்றுங்கடி.

## தற்கால நிலைமை

3. கிட்டுங் கடிமலர் கொட்டுங் கடிகையைத்
தட்டுங் கடிகண்ணீர் சொட்டுங்கடி
மட்டில் புகழ்கொண்ட இந்திய தேவியின்
மாட்சிமை கெட்டதைக் கேளுங்கடி.

4. கெட்டோ மடிகுடி கெட்டோ மடிநாம்
பட்டோ மடிவெகு கஷ்ட மடி
முட்டத் தரித்திரம் கிட்டி முறைத்திட
மூதேவி நம்மை முறைமை கொண்டாள்.

5. கஞ்சியற் றோம்பழங் கந்தையற் றோம்குல
வஞ்சிய ரேஎன்ன வஞ்சமடி
கெஞ்சிநின் றோம்மிக அஞ்சுகின் றோம்என்ன
கால மடிவந்த கோலமடி.

6. பேரும் புகழும் பெருமையுங் கொண்டவர்
பேரரின் பேரின் பேரரடி
சீரும் சிறப்பையும் விற்றுவிட்டு நாம்
சின்னத் தனத்தினை தேடிக்கொண்டோம்.

7. வீரர் குடித்தன வீரரடிநாம்
வீரருள் வீரரின் பேரரடி
சூரர் குடித்தனச் சூரரடி யிப்போ
சோற்றுக்கும் தண்ணிக்கும் சோருதடி.

8. அன்னிய ரெத்தனை வந்தா லும்வெகு
அன்புடன் கொண்டு விருந்தளிக்கும்
கண்ணிய மான குடியிற் பிறந்துநாம்
கஞ்சியு மற்றுக் கதறுகின்றோம்.

9. வெண்ணெயும் பாலும் பெருகி வழிந்திடும்
பண்ணைய மெங்களின் பண்ணையடி
தண்ணியு மின்றித் தயங்கத் தரித்திரம்
தங்கு தடிமனம் பொங்குதடி.

10. கோடானு கோடி குடித்தனக் காரரின்
கூட்ட மடியெங்கள் கூட்டமடி
நாடோடி யாகி நடுத்தெரு வில்நின்று
நாமும் புலம்பிடும் ஞாயமென்ன.

11. கண்ணும் மனமும் கருத்துங் கொண்டமட்டும்
காணுமடி யெங்கள் காணியடி
கண்ணும் மனமும் கருத்துஞ் சுழன்றிடக்
கஞ்சியற் றோமடி வஞ்சியரே.

12. மன்னருள் மன்னரும் வந்து வணங்கிடும்
மன்னவர் மன்னரின் மைந்தரடி
சின்னரிற் சின்னரும் நின்று சிரித்திடச்
செய்வினையென்னடி சேடியரே.

13. மானம் பெரிதென்று ப்ராணனை விட்டுயர்
மாட்சிமை கொண்டவர் மைந்தரடி
மானத்தை விற்று வயிற்றை வளர்த்திடும்
மாயமு மென்னடி சேயிழையே.

14. முத்தும் பவளமும் சிந்திக் கிடந்திட்ட
முற்ற மடியெங்கள் முற்றமடி
சொத்தைப் பணத்திற்கும் செல்லாத காசுக்கும்
சோரு தடிமனங் கோருதடி.

15. பார்த்த திசையெங்கும் பச்சைப் பசேலென்று
பார்க்கு மடியெங்கள் பாளையத்தில்
பார்த்த திசையெங்கும் நீத்துக் கிடக்கின்ற
பாவமு மென்னடி பூவையரே.

16. பட்டும்பட் டாடையும் கட்டிக் கழித்திட்ட
பட்டையக் காரரின் பந்தரிலே
கட்டக் கையகலக் கந்தையு மின்றிநாம்
கத்துவ தென்னடி சித்திரமே.

17. பாலும் தினுசுப் பழவகை யும்மூன்று
வேளையும் தின்று வெறுத்தவர்நாம்
பாழும் வயிற்றுக்குக் கூழுமின் றியிப்போ
பற்று தடிவயிறு வற்றுதடி.

18. எண்ண எண்ணமனங் குன்னு தடிவினை
என்னென்று சொல்லுவேன் கன்னியரே
பண்ணிய தொல்லைப் பழவினையோ என்ன
பாப மடிஎவர் சாபமடி.

ஏன் இக்கதியடைந்தோம்?

19. பாபமல் லவருஞ் சாபமல் லமுனி
கோபமுஞ் சாமியின் குற்றமல்ல
தாப மடிபெற்ற தாயை மறந்ததால்
தாழ்வடைந் தோமடி தையலரே.

20. மாதாவின் பெற்ற வயிறெரிய நாம்
மஹேச்வர பூஜையைச் செய்தோமடி
ஆதலி னுலிந்த வேதனை வந்ததும்
ஆச்ச ரியமல்ல ஆச்சியரே

## அந்தத் தாய் யார்?

21. மூப்புடை இந்திய தேவியடி நம்மை
முன்னம் பயந்து வளர்த்தெடுத்தாள்
மூப்புடை இந்திய தேவியடி நம்மை
இன்னும் புரந்து முகந்துடைப்பாள்.

22. எத்தனை காலஞ் சுமந்திருந் தாள்நமக்
கெத்தனை கஷ்ட மனுபவித்தாள்
அத்தனை கஷ்டமும் நாம்மறந் தோமவள்
அத்தனை குற்றமு மேபொறுத்தாள்.

23. பெற்ற வயிறும் எரியா தோ அவள்
பேதை மனமும் வருந்தாதோ
பெற்ற குழந்தைகள் தன்னை மறந்ததைப்
பெண்ணு மொருத்தி சகிப்பாளோ.

24. பெற்ற மனமுங் கசிந்தழுது அந்தப்
பேதை யுகுத்திடுங் கண்ணீரால்
பெற்ற தனமும் புகழு மிழந்துநாம்
பேதைக ளானது பெண்ணாசே.

25. தாயை மறந்த குழந்தைக ளெப்படித்
தாரணி தன்னில் செழிக்குமடி
தாயை யிகழ்ந்த குழந்தை களையிந்தத்
தாரணி நின்று பழிக்குமடி.

26. அன்னையும் தந்தையுந் தெய்வமென் றுமுன்னம்
சொன்ன கிழவியின் வார்த்தையைப்போல்
அன்னையும் தந்தையும்! அத்தையும் மாமனும்
அத்தனை யும்இந்து தேசமடி.

## இந்தத் தேசத்தின் எல்லையும் சிறப்பும்

27. வெள்ளி மலையும் வடக்காக விரி
வெற்புடைச் சிங்களம் தெற்காகப்
பள்ளக் கடலடி வங்கா ளக்கீழ்ப்
பாரிசம் மேற்கில் அரபிக்கடல்.

28. பரந்து கிடக்கின்ற தேச மதிநம்மைப்
பாலிக்கும் இந்திய தேவியடி
சிறந்து விளங்கிய தேச மடிஅவள்
சீரும் சிறப்பையுங் கேளுங்கடி.

29. ஞான முதித்தது இந்நாடு அருள்
ஞானிகள் நின்றது மிந்நாடு
மோன மறிந்த முதல்நாடு வெகு
முத்த ரிருந்தது மிந்நாடு.

30. புத்தர் பிறந்தது இந்நாடு அவர்
போதம் வளர்ந்தது மிந்நாடு
சித்தரி ருந்தது மிந்நாடு வெகு
சித்திகள் பெற்றது மிந்நாடு.

17 JAN 1950
MADRAS

31. சீதை பிறந்தது மிந்நாடு அவள்
சீர்த்தி விளங்கிய திந்நாடு
கீதை பிறந்தது மிந்நாடு வெகு
கீர்த்திகள் பெற்றது மிந்நாடு.

32. முன்னுமில் லைஇனிப் பின்னுமில் லையென
முந்திய நீதியின் மூவேந்தர்
மன்னரடி சேர சோழரும் பாண்டியர்
மாட்சிமை கொண்டது மிந்நாடு.

33. எட்டி லடக்க முடியாது மனம்
எண்ணி எழுதவும் போதாது
பாட்டி லடக்க முடியாத புகழ்ப்
பாவையு மிந்தக் கதியானாள்.

## இனி நாம் செய்யவேண்டிய தென்ன?

34. போனது போகட்டும் கண்மணி யேயினி
யாகிலும் புத்தி யுடனிருப்போம்
மாநிலத் தாயை வணங்கிநின் றுலினி
மாநிலத் தேமிக நாமுயர்வோம்.

35. இந்திய தேவியைப் பூஜைசெய்ய நாம்
இந்திய ரெல்லோரும் ஒன்றடியே
எந்த மதத்திற்கும் எந்தக் குலத்திற்கும்
சொந்த மடிஅவள் தொந்தமடி.

36. நல்லவர் கெட்டவ ரென்பதன்றி மற்றும்
நாலு வருணமு மொன்றடியே
தொல்லைச் சுருதியின் சொல்லடி யேஇதைத்
தோகையே நீயும் மறக்காதே.

37. பறையரும் நமது குலத்தரடி சுத்தப்
பார்ப்பன ரும்சொந்தப் பந்துவடி
அரையனு மெங்களுக் கானவ னேயன்றி
அல்லவ னும்வெகு நல்லவனே.

38. அன்னிய னானும் இந்திய நாட்டை
அடைந்தவன் எங்களுக் கண்ணனடி
மன்னவ ரானும் இந்திய நாட்டை
மறந்தவர் தங்களை நாமறப்போம்.

39. எந்தக் குலத்தில் பிறந்தா லும்அவர்
எந்த நிலையி லிருந்தாலும்
இந்து நிலத்தில் பிறந்தவர் எல்லோரும்
இந்திய தேவியின் மக்களடி.

40. பூஜையென் றுல்வெறும் பூஜையல்ல செல்வப்
புண்ணிய பூமியின் பிள்ளைகளே
ஆசை யுடனவள் கைத்தொழில் வித்தையை
ஆதரஞ் செய்யுங் கட்மையடி.

41. கைத்தொழில் கெட்டுக் கலங்கு தடிதேசம்
கைத்தொழி லின்றிப் புலம்புதடி
கைத்தொழில் தன்னை விருத்திசெய் தாலந்தக்
கண்ணுடைத் தேவியும் கண்விழிப்பாள்.

42. ஆயிரம் ஆயிரம் வித்தை யடிஇங்கே
ஆதரிப் பாரின்றிச் செத்ததடி
ஆயிரம் ஆயிரம் கைத்தொழி லாளிகள்
ஆதர வின்றி வருந்துகின்றார்.

43. இந்திய தேவியின் கைத்தொழி லைநாம்
ஏற்றுப் புகழக் கடமைப்பட்டோம்
இந்தியதேவியின் வித்தைக ளைநாம்
எந்த விதத்திலும் ஆதரிப்போம்.

44. இந்திய தேசத்தில் உண்டான பொருள்
எந்த விதத்திலும் உத்தமமே
இந்திய தேசத் தொழிலாளி நமக்
கெந்த விதத்திலும் சொந்தமதால்.

45. அன்னியர் சாக்கைத் தீண்டோ மேநாம்
அன்னியர் தயவை வேண்டோமே
அன்னியர் பொருளைத் தீண்டுந் தொறும்அந்த
அன்னை வயிற்றி லடிப்பதுபோல்.

பயன்

46. என்று நினைந்து மனங்கசிந்து நாம்
இந்திய தேவியைப் போற்றிசெய்தால்
நின்ற துயரம் மறையுமடி இங்கே
நீடிய பஞ்சம் பறக்குமடி.

47. கண்டுகொண் டோமடி கண்மணி யேஇனிக்
காரண மின்ன தெனத்தெரிந்தோம்
பண்டைச் சிறப்பினை நாமடைய இந்து
பாவை பதத்தினைப் பூஜைசெய்வோம்.

48. பஞ்சமும் நோயும் பறக்குமடி அந்தப்
பத்தினி தேவியை நாம்நினைத்தால்
பஞ்சமும் நோயும் பகைக்குமடி அந்தப்
பத்தினி தேவியை நாம்மறந்தால்.

49. பொங்கு மடிபால் பொங்கு மடியினிப்
புண்ணிய பூமி மனைதோறும்
மங்கு மடிவினை மங்குமடி இந்த
மங்கையை நாமும் மனதில்வைத்தால்.

வாழி

50. வாழி மழைபொழி வான மொடுவரு
மேழி யுழவர் வழிவாழி
வாழிய கைத்தொழில் வாணிபம் தம்மொடு
வாழ்விக்க நின்றிடும் ராஜாங்கம்.

51. இந்திய தேவி தனக்கா கத்தம்
சொந்த சுகத்தைத் துறந்தவர்கள்
எந்த மதத்திலும் எந்தக் குலத்திலும்
வந்தவர் வந்த வழிவாழி.

## தீண்டாமை ஒழிக

1. தீண்டாமை யென்கின்ற தீய வழக்கம்
தீரத் தொலைந்திட நாளாச்சு
ஆண்டவன் பொதுவென்று நம்பின யாரும்
அந்தப் பழியை அகற்றிட வாரும் (தீண்)

2. இந்த வழக்கம் நாளுக்கு நாளாய்
இந்து மதத்தினை வெட்டுது வாளாய்
நிந்தை மிகுந்து அழிந்திடும் முன்னே
நீக்கிட யாரும் எழுந்திடும் இன்னே (தீண்)

3. வேதத்தி லில்லை கீதையில் இல்லை
வேறுள்ள சாத்திரம் யாருக்கினி ?
சாதித்து யாரையும் சண்டாள னென்றிடும்
சாத்திரம் சத்தியச் சம்மதமோ ? (தீண்)

4. நால்வருரைத்ததே வாரத்திலில்லை
நந்தன் குலத்துக்கு நிந்தைசொலல்
பால்வரும் ஆழ்வார் பாசுரத்திலில்லை
பாணர் வளர்ந்ததைக் கோணலெனல் (தீண்)

5. சங்கரன் காசியில் அங்கென்ன சொன்னார்
சண்டாள பக்தனும் தம்குருவென்றார்
எங்கள் ராமானுஜர் தம்குலமென்றே
யாரையுங் கொண்டுடன் கோயிலுட்சென்றார் (தீண்)

6. காட்டொரு வேடனைத் தம்பியென்றெய்திக்
கழுகினைத் தந்தை யெனக்கடன் செய்து
சேட்டைக் குரங்கையும் தன்னுடன் சேர்த்துச்
சீதாபிராமனும் செய்ததைப் பார்த்துத் (தீண்)

7. கண்ணப்ப னெச்சிலை முக்கண்ணனுண்டான்
கண்ணபிரான் கடைநீரையுங் கொண்டான்
எண்ணிய பக்தருக் கெளியது தெய்வம்
என்பதுவே நல்ல ஹிந்துவின் தர்மம் (தீண்)

## யார் சண்டாளன்?

(இராகம்: நவரோஜ்)

பல்லவி

நானோ சண்டாளன்!—சரி—தானோ உங்களுக்கு?

சரணங்கள்

1. தாயை யிகழ்ந்தவன் சண்டாளன்
தந்தையை நொந்தவன் சண்டாளன்
தூயவர் நல்லோர் பெரியோரைத்
தோஷ முரைத்தவன் சண்டாளன்
தீயவை செய்தே பலர் ஏசத்
தின்றுழல் கின்றவன் சண்டாளன்
ஏவின செய்வேன் குற்ற மிலேன்
எளியவ னேனென் என்பதற்கே (நானோ)

2. வீட்டை மறந்தவன் சண்டாளன்
வேசியர்க்கலைபவன் சண்டாளன்
நாட்டைக் காட்டிக் கொடுத்ததனால்
லாபமடைந்தவன் சண்டாளன்
பாட்டைத் தனிவழி வந்தோரைப்
பதுங்கி யடிப்பவன் சண்டாளன்
ஓட்டைக்குடிசையில் வாழ்கின்றேன்
ஒரு சிறு பாபமும் அறியாத (நானோ)

3. நன்றி மறந்தவன் சண்டாளன்
நயமுரை வஞ்சகன் சண்டாளன்
கொன்று சுகித்தவன் சண்டாளன்
கோப மிகுந்தவன் சண்டாளன்
கன்று நலிந்திடப் பாலெல்லாம்
கறந்து புசித்தவன் சண்டாளன்
ஒன்றுந் தெரியேன் "ஏழை" எனும்
ஒன்றே என்குறை அதற்காக (நானோ)

4. கள்ளைக் குடிப்பவன் சண்டாளன்
காமத்தலைபவன் சண்டாளன்
கொள்ளை அடிப்பவன் சண்டாளன்
கூடிக்கெடுப்பவன் சண்டாளன்
'அள்ளித்தெரிக்கா'ப் பணக்காரன்
ஆபத் துதவான் சண்டாளன்
வெள்ளைத் துணியொன்றில்லாமல்
வேலை செய்வேன் அதற்காக (நானோ)

5. தெய்வமிகழ்ந்தவன் சண்டாளன்
தீனரைக் கெடுத்தவன் சண்டாளன்
பொய்யுரை பேசிப் பிறர் கேடே
புரிந்து பிழைப்பவன் சண்டாளன்

'ஐய அடைக்கலம்' என்றோரை
ஆதரிக்காதவன் சண்டாளன்
வெய்யில் மழை யென்றில்லாமல்
வேண்டிய செய்வேன் அதற்காக (நானோ)

6. ஆலயத்துள்ளே அபசாரம்
அறிந்தே புரிந்தவன் சண்டாளன்
கூலியை மறைத்தவன் சண்டாளன்
கோள்சொல்லிப் பிழைப்பவன் சண்டாளன்
வேலியைக் கடந்தே பிறன் பயிரை
வேண்டுமென் றழித்தவன் சண்டாளன்
காலையும் மாலையும் இல்லாமல்
கஷ்டப் படுவேன் கள்ளமிலேன் (நானோ)

7. வட்டி பெருக்கி ஏழைகளின்
வாழ்வு கெடுத்தவன் சண்டாளன்
பட்டினி எளியவர் ஆசையுடன்
பார்த்திட உண்பவன் சண்டாளன்
ஓட்டிய வழக்கில் பணத்திற்காய்
ஓரஞ்சொன்னவன் சண்டாளன்
அட்டியில்லாமல் சொன்னதெல்லாம்
அடியேன் கேட்டேன் அதற்காக (நானோ)

8. தானங் கொடுப்பதைத் தடுத்திடுவோன்
தவத்தைப் பழிப்பவன் சண்டாளன்
மானங் கெடுத்தவர் சோறுண்டு
வயிறு வளர்ப்பவன் சண்டாளன்
கானுங் கரடும் உங்களுக்காய்க்
கல்லிலும் முள்ளிலும் பாடுபடும்
ஏனிங் கென்னைச் 'சண்டாளன்'
என்பது சரியோ உங்களுக்கே? (நானோ)

# தீண்டாமை ஒழிய—ஆலயப்பிரவேசம்

பல்லவி

ஓட்டடா! ஓட்டடா!—நாட்டைவிட்டு ஓட்டடா!
தீட்டடா மனிதருக்குள்—தீண்டலென்ற தீமையை (ஓ)

கண்ணிகள்

1. தொத்து நோய்கள் மெத்தவும் தொடர்ந்துவிட்டபேரையும்
தொட்டு கிட்டி சொஸ்தமாக்கல் தர்மமென்று சொல்லுவார்!
சுத்தமேனும் ஜாதியால் தொடப்படாது என்றிடல்
தொத்துநோயைக்காட்டிலும்கொடியரென்றுசொல்வதோ (ஓ)

2. நாய்குரங்கு பூனையை நத்திமுத்தமிடுகிறோம்
நரகலுண்ணும் பன்றியும் நம்மைத்தீண்ட ஒப்புவோம்
ஆயும் ஆறு அறிவுடை ஆன்மஞான மனிதனை
அருகிலே வரப்பொறுமை அறிவிலே பொருந்துமோ ? (ஓ)

3. செடிமரங்கள் கொடிகளும் ஜீவரென்ற உண்மையை
செகமறிந்து கொள்ளமுன்பு செய்ததிந்தநாடடா!
முடிவறிந்த உண்மை ஞானம் முற்றநின்றநாட்டிலே
மூடரும் சிரிக்குமிந்த முறையிலா வழக்கமேன் ? (ஓ)

4. உயிரிருக்கும் புழுவையும் ஈசனுக்கு உறையுளாய்
உணருகின்ற உண்மைஞானம் உலகினுக்குரைத்தநாம்
உயருகின்ற ஜீவருக்குள் நம்மொடொத்த மனிதனை
ஒத்திப்போகச்சொல்லுகின்ற தொத்துக்கொள்ளலாகுமோ? (ஓ)

5. அமலனாகி அங்குமிங்கும் எங்குமான கடவுளை
ஆலயத்துள் தெய்வமென்று அங்கிருந்து எண்ணுவோம்
விமலனான கடவுள் சக்திமனிதன்கிட்டி விலகினால்
வேறுஜீவர் யாவும் அந்த விமலனென்பதெப்படி ?

6. ஞாயமல்ல ஞாயமல்ல ஞாயமல்ல கொஞ்சமும்
நாடுகின்ற பேர்களை நாமிடை தடுப்பது
பாயுமந்த ஆற்றிலே பருகிவெப்பம் ஆறிடும்
பறவையோடு மிருகமிந்தப் பாரிலார் தடுக்கிறார் ?

## ஸாத்விக வழியே நல்ல வழி

(இராகம் : ஆனந்தபைரவி—தாளம் : ரூபகம்)

### பல்லவி

நல்ல வழியிருக்க அல்லல் வழிநினைத்து
நாளும் அலைந்தாய் நெஞ்சமே (நல்ல)

### அநுபல்லவி

தொல்லைமுனிவரர்கள் சொல்லியவழியது
சுதந்தரநாட்டிற்குச் செல்லுதற்கெளியது (நல்ல)

### சரணங்கள்

1. கடியும்புலிகரடி கொடியமிருகமில்லை
கள்வர்கள் பயமில்லை பள்ளம்மேடுள்ளதல்ல
குடியுங்கொலைகளவும் அடியும்வழிபறியும்
கொஞ்சமும் அதிலில்லை நெஞ்சமே நீசெல்ல (நல்ல)

2. கோபமென்னும் வெயிலின் தாபமங்கடிக்காது
க்ரோதமெனும்பனியின் குளிர்வந்துநடுக்காது
சாபம்பிறர்க்குச்சொல்லும் தாகமும் எடுக்காது
சங்கடப்பேய்கள்நம்மை அங்கேதும் தடுக்காது (நல்ல)

3. நாடும்மதங்களெல்லாம் கூடும்அவ்வழிசென்று
நாலிருவழிகட்கும் நடுவானததுவொன்று
பாடும்மறைகளெல்லாம் தேடும்அதனையென்றும்
பக்தியுடையவர்க்குப் பாதைமிகவும்நன்று (நல்ல)

4. ஆய்ந்தபெரியவர்கள் தேர்ந்தது அவ்வழி
ஆனந்தசுதந்தரம் போனவர்க்கங்குவெளி
காந்தி முனிவன்சொல்லும் சாந்தமென்றொருமொழி
காட்டியவழிசென்றால் வீட்டையடைவாய்தெளி

## நம்நாடு வாழவேண்டும்

(விருத்தம்)

1. நம்நாடு செழிக்கவேண்டும் நாமெல்லாம் களிக்க வேண்டும்
தம்நாடு மட்டும்வாழப் பிறர்நாட்டைத் தவிக்கச் செய்யும்
வெம்நாடு களுக்கெலாமோர் விழுமிய ஞான மார்க்கம்
எம்நாடு உதவிற்றென்று இந்தியன் மகிழ வேண்டும்.

2. கண்டவர் மகிழவேண்டும் கேட்டவர் புகழ வேண்டும்
கொண்டவர் குலவவேண்டும் குறைந்தவர் நிறைந்து மெச்ச
அண்டின எவரும் அச்சம் அடிமையை அகற்று மாறு
தண்டமிழ் அலைகள்வீசி நம்நாடு தழைக்க வேண்டும்.

3. இலக்கண உயர்விற்சொல்லின் இனிமையிற்பொருளில் வாழ்வின்
விலக்குகள் விதிகள்வைக்கும் விதத்தினில் விநயம் தன்னில்
கலைக்கொரு தனிமைகாட்டும் கவிதையின் கனிவில் கற்றோர்
தலைக்கொளும் தமிழைப்போற்றி நம்நாடு புதுமை தாங்கும்.

4. எந்தநாட் டவர்வந்தாலும் எம்மொழி பேசினாலும்
சொந்தநாட் டவர்போலிங்குச் சுகித்துநிம் மதியாய் வாழத்
தந்தநா டுலகிலிந்தத் தமிழகம் போலொன் றுண்டோ
அந்தநம் புகழைக்காத்து நம்நாடு அன்பே ஆற்றும்.

5. அன்பினால் கலந்துவாழ்ந்து 'ஆரியன்' 'அயலான்' என்னும்
வம்பெலாம் வருமுன்னாலே வள்ளலார் வளர்த்த வாய்மை
என்பெரும் தமிழாலிந்த இருநில மக்கட் கெல்லாம்
இன்பமே தருவதாக நம்நாடு இசைக்க வேண்டும்.

6. அன்னியம் அறிவிற்கில்லை அன்பிற்கு அளவே இல்லை
என்னவே உலகில்மற்ற எவரெவர் மொழியும் ஆய்ந்து
தன்னொடும் வாழவைத்த தமிழ்மொழி பெருமை தாங்கி
நன்னெறி விளக்காய்நின்று நம்நாடு நலமே நல்கும்.

7. புதுப்புது அறிவைத்தேடிப் போயலைந் துழன்று நாடி
விதப்பல விஞ்ஞானத்தை விரித்திடும் மெஞ்ஞானத்தால்
பொதுப்படக் கலைகளெல்லாம் தமிழிலே புதுமை பூண
மதிப்பொடு எவரும் போற்ற நம்நாடு மணக்க வேண்டும்.

8. தமிழர்கள் உலகுக்கீந்த வள்ளுவர் தானே என்ன
அமிழ்தினும் உயர்ந்ததான அறமெலாம் நடந்து காட்டும்
கமழ்மணம் உலகம்போற்றும் காந்திபார் ஏந்தும் கொள்கை
நமதெனும் பெருமையோடு நம்நாடு நன்மை பேசும்.

9. தாழ்வுகள் யாவும் போகத் தரித்திரக் கொடுமை நீங்கிச்
சூழ்கடல் உலகில்மக்கள் சுதந்தரத்துடனே வாழ்ந்து
ஆழ்கலை அறிவும் ஓங்கி ஆண்டவன் அன்பைக் கண்டு
வாழ்ந்திட வேண்டுமென்றே நம்நாடு வாழவேண்டும்.

## கொடிவணக்கம்

1. கொடி வணக்கமது செய்வோம்—நாட்டின்
குறைகள் நீங்கியினி உய்வோம்
முடி வணங்கியதைப் போற்றி—அதன்
மூன்று நிறக்குறி சாற்றி. (கொடி)

2. புதுமையான கொடி பாரீர்—வேறு
பூதலத்திலிலை தேரீர்
முதுமையா யெவர்க்கும் பொதுவாம்—வாழ்வின்
முறையைக் காட்டுவது இதுவாம். (கொடி)

3. பச்சையான ஒரு தோற்றம்—நமக்குப்
பக்தி வேண்டுமெனச் சாற்றும்
இச்சையான பொருள் கூடப்—பக்தி
இருக்க வேணுமதை நாட (கொடி)

4. தூய்ய வெள்ளைநிறக் காட்சி—உண்மை
துலங்குமென்பதற்குச் சாட்சி
மையமாக நிற்கும் மர்மம்—ஸத்யம்
மதங்கள் யாவினுக்கும் தர்மம். (கொடி)

5. துறவின் வண்ணமந்தக் காவி—உலகின்
துக்கப் பூட்டினுக்குச் சாவி
சிறையும் வீடுமதற்கொன்றே—என்னும்
சேதி ஓதுவதற் கென்றே. (கொடி)

6. நடுவில் ராட்டையொன்று பார்ப்போம்—அதில்
நலிந்த பேர்க்குக்கஞ்சி வார்ப்போம்.
வடுவிலாத தொழில் நூற்றல்—குடிசை
வாழும் ஏழைக்கென்று சாற்றல். (கொடி)

7. பக்தி சத்தியம் த்யாகம்—இவற்றின்
பண்பே வாழ்க்கையின் யூகம்
நித்தம் நித்தமிந்த நீதி—தன்னை
நீட்டும் நம் கொடியின் ஜோதி. (கொடி)

8. ஜாதிபேதமதில் இல்லை—மற்றும்
சமய பேதமதில் இல்லை
நீதி யானபல முறைகள்—தமக்கு
நிலைய மாகுமதன் குறிகள். (கொடி)

9. என்ன புதுமையிது பாரும்—கொடி
ஏதிதுபோலொன்று கூறும்
அன்னை கொடியிதனைப் பாடி—அதன்
அடியில் நின்று புகழ் கூடி (கொடி)

10. ஏழை எளியவர்கள் யார்க்கும்—பயம்
இல்லை யென்ன அறம் காக்கும்
வாழி நமது கொடி வாழி—பொது
வாழ்வு தந்தினிது ஊழி. (கொடி)

## கொடிப்பாட்டு

### (விருத்தம்)

1. கற்புடைப் பெண்கட்கெல்லாம் கணவனே தெய்வமென்பார்
சொற்பொருள் அறிந்தோர்க்கெல்லாம் சொன்ன சொல் தெய்வ
மற்பெரும் வீரர்க்கெல்லாம் மானமே தெய்வமாகும் [மென்பார்
நற்பெயர் நாட்டிற்காக்கும் நமக்கிந்தக் கொடியே தெய்வம்.

2. அன்னியக் கொடிக ளெல்லாம் அரசியல் ஒன்றே பேசிப்
பொன்னியல் போக வாழ்வின் பொதுநலம் தனைத்தாம்கோரும்
என்னுடைப் பரத நாட்டின் இக்கொடி இந்த வாழ்வின்
பின்னையும் அறிவு தேடும் பேரின்பம் தனையும் பேசும்.

3. பிறநாட்டுக் கொடிக ளெல்லாம் பிறர்நாட்டைப் பிடிக்க எண்ணி
மறம்நாட்டி மக்கள் தம்மைச் சண்டையில் மடியச் செய்யும்
அறம்நாட்டி உலகை யாண்ட ஆரியர் கொடியோ மூன்று
நிறம்காட்டி நிலையா யுள்ள நீதியே ஓத நிற்கும்.

4. பச்சையாம் நிறத்தி னாலே பசுமையாம் அன்பை யூட்டும்
நிச்சயம் வெள்ளை அந்த நிமலமாம் உண்மை நீட்டும்
துச்சமிவ் வுலக மென்னும் துறவினைக் காவி சொல்லும்
அச்சமில் குடிசைச் சூலி அதிலொரு ராட்டை காட்டும்.

5. தருமமே குறியாக் கொண்டு தனக்கென எதையும் வேண்டாக்
கருமமே கடனென் றோதிக் கருணையின் வழியே காட்டி
வருமமும் வஞ்சம் நீக்கும் வாழ்க்கையை வகுத்துப் பேசும்
பெருமைநம் கொடியைப்போலப் பிறிதொரு கொடியும் உண்டோ!

6. இந்திய மகனே ! இந்த இணையிலாக் கொடியைக் காத்தல்
முந்தியுன் முன்னோர் தந்த அறமெலாம் முடிப்ப தாகும்
எந்தவூர் நாட்டிற் கேனும் எதிரியாய் எடுத்த தல்ல
சந்ததம் உலகுக் கெல்லாம் சாந்தியைத் தரவே யாகும்.

## கொடிப்பாட்டு

பல இராகங்களிற் பாடலாம்.

(முக்கியமாகச் சுருட்டி, ஸ்ரீராகம், அடாணா, காம்போதி முதலிய இராகங்களுக்கு எடுத்தது. மற்றும் சங்கீத வித்துவான்களுடைய சாமர்த்தியத்துக்குத் தகுந்தபடி அமையும். இராக ஞானமில்லாதவர்களும் சுலபமான மெட்டில் பாடலாம்.)

பல்லவி

கொடியைக் கும்பிடுவோம்—நம்முடை நாட்டின்
கொடியைக் கும்பிடுவோம்.

சரணம்

1. எந்தக் கடவுளை எவர்தொழு தாலும்
எத்தனை வேற்றுமை நமக்கிருந் தாலும்
இந்தியர்க் கெல்லாம் பொதுவாம் தெய்வம்
இந்தக் கொடியே இதிலென்ன ஐயம் (கொ)

2. சத்தியப் பாறையில் வேர்ஊன் றியகொடி
சாந்தக் கோலின் உச்சியில் மணிமுடி
நித்திய மாகிய சுதந்திர வாழ்வினை
நித்தமும் நினைத்திட நின்றெமை ஆள்வது (கொ)

3. சமரசம் காட்டிடும் துகிலினை வீசி
சச்சர வாறிடத் தென்றலிற் பேசி
அமைதியும் அன்புடன் அனைவரும் பொதுவாம்
அரசியல் நடத்திட அறிகுறி இதுவாம் (கொ)

4. காற்றொடு பெருமழைக் கலந்தடித் தாலும்
கடுத்தவர் இருந்திடில் படையெடுத் தாலும்
போற்றிஇக் கொடியினை உயிரெனக் காப்போம்
பூதலம் வியந்திடும் புகழொடு பூப்போம் (கொ)

5. ஏழையும் செல்வனும் எனதென தென்றே
எல்லா ரும்தொழ நடுவினில் நின்றே
வாழிய வையகம் வாழ்ந்திட வேண்டி
வாழிய கொடியே வாழ்கபல் லாண்டும் (கொ)

## கொடிப்பாட்டு.

பல்லவி

கொடியைப் போற்றிக் கும்பிடு
கொடுமை தீரும் நம்பு நீ

சரணம்

1. அச்சம் போக்கும் கொடி இது
ஆண்மை நல்கும் கொடி இது
இச்செ கத்து வாழ்வினை
இன்ப மாக்கும் கொடி இது (கொடி)

2. பரத நாட்டின் கொடி இது
பழமை யான கொடி இது
விரத மாகப் போற்றினல்
விருப்பம் யாவும் சித்தியாம் (கொடி)

3. சத்தி யத்தின் கொடி இது
சக்தி தந்த கொடி இது
புத்தி மிக்க ஞானிகள்
பூஜை செய்த கொடி இது (கொடி)

4. மரண மென்ற எண்ணமே
மனதி லின்றிச் செய்திடும்
திரண மாக எதையுமே
த்யாகம் செய்யத் தந்திடும் கொடி)

5. கட்டு விட்ட மக்களை
அன்பு கொண்டு கட்டியே
ஒற்று மைப்ப டுத்தவே
உறுதி யான கொடி இது (கொடி)

6. ஜாதி பேதத் தீமையைச்
சாம்ப லாக்கும் கொடி இது
நீதி யான எதையுமே
நின்று காக்கும் கொடி இது (கொடி)

7. ஊழி தோறும் புதியதாம்
உறுதி கொண்ட கொடிஇது
வாழி வாழி நம்கொடி
வாழ்க வாழ்க நாடெலாம் (கொடி)

## தேக ஆரோக்யம்

### கடவுள் வணக்கம்.

(விருத்தம்)

உலகெலாம் தந்தே இந்த உலகுள பிறவிக் கெல்லாம்
உயர்ந்துள பிறவி தந்து
நிலையிலாத் தேகந்தன்னை நீண்டநாள் நிலைக்கச் செய்து
நெருங்கிய நோய்கள் தீண்டா
அலகிலா வாழ்க்கைக் கான விதிகளும் அவற்றைக் காணும்
அறிவையும் நமக்குத் தந்து
மலர்மணம் போல நம்முள் மறைந்தருள் சுரந்து காக்கும்
மகிமையை மனத்துள் வைப்பாம். (1)

### முறையீடு

(விருத்தம்)

உலகினிற் சிறந்த தென்றும் உருவினிற் பரந்த தென்றும்
உயர்தவ யோகர் சித்தர் ஒப்பிலார் இருந்த தென்றும்
பலவளம் நிறைந்ததென்றும் பகுத்தறி வுயர்ந்த தென்றும்
படித்தனம் கேட்டோ மந்தப் பாரத தேச மக்கள்
புலபுல வென்று நித்தம் புதுப்புது நோய்க ளாலே
புழுக்கள்போல் விழுந்து மாண்டு போவதைக் கண்டுமையோ
விலகிட வழிதே டாமல் விலங்கினம் போல வாழ்ந்து
விதியென வாதம் பேசி வீணரா யிருத்தல் நன்றோ. (2)

உடல்வலி மிகுந்து நல்ல ஊக்கமும் உறுதி பொங்க
உலகினில் இன்ப மெல்லாம் உயர்வழி அநுப வித்த
திடமுள தீர வீரர் திகழ்ந்தஇச் சிறந்த நாட்டில்
சிறியதோர் நோய்வந் தாலும் தாங்கிடத் திறனில் லாமல்

நடைப் பிணம் போல நாமும் நாள்கழித் திருந்தோ மையோ
நாடிலோம் இதனை மாற்ற நல்வழி யென்ன வென்று.
மடமையோ மதியோ அன்றி விதியெனும் மயக்கந் தானோ.
மாற்றநாம் அல்ல வென்றால் மதியினாற் பயன்தா னென்னே (3)

பிணியிலே பிறந்து நித்தம் பிணியையே அருந்திப் பொல்லாப்
பிணியிலே வளர்ந்தே அந்தப் பிணியினாற் சாகக் கண்டும்
அணியிலே ஆடை யாலே அலங்கரித் தோமே யன்றி
அறிவிலே ஆசா ரத்தால் அழகெதும் செய்தோ மில்லை
பணியிலும் பணத்தி லேயே சுகமெலாம் இருந்தாற் போலப்
பழகினோம் நாமே யன்றிப் பழக்கினோம் மக்கள் தம்மைத்
துணிவிலோம் தூய்மை விட்டோம் சுசிகர நடத்தை விட்டோம்
துவக்குவோம் இனிமே லேனும் நோய்களைத் துடைக்கும்
[வாழ்க்கை. (4)

உண்டியில் ஆசை வைத்தோம் ஒழுக்கமே மறந்து போனோம்
பெண்டினர் மக்கள் தம்மை வளர்த்திடும் முறைமை பேணார்
மண்டையி லெழுத்தி தென்று மயங்கினோம் கர்மந் தன்னை
மண்டின நோய்கள் க்ஷாமம் மலிந்திட நலிந்தோ மையோ. (5)

## சுகாதார வழக்கம்

### கும்மி

கும்மி யடிபெண்கள் கும்மி யடிகுல
தெய்வத்தைக் கும்பிட் டடியுங்கடி
நம்முடைத் தேசத்தில் நோய்களில் லாமலே
நாடு செழித்திட வேணுமென்று (1)

செத்தவர் தம்மை எழுப்பித் தாவல்ல
சித்த ரிருந்த திருநாட்டில்
எத்தனை யெத்தனை நோய்களி னால்மக்கள்
ஈசலைப் போல மடிவதென்ன (2)

ஈசன ளித்த அறிவிருந் தும்நல்ல
இயற்கை விதிகளை விட்டுவிட்டு
மோச மிகுந்த பகட்டுடை வாழ்க்கையில்
மோகம்வைத் தேஇந்த மோசமுற்றோம் (3)

சுத்த உணவிலும் சுத்த உடையிலும்
சொன்ன விதிகளை விட்டுவிட்டோம்
நித்தங் குளிப்பதும் பத்தியங் காப்பதும்
மெத்தக் குறைந்தது தேசத்திலே (4)

காலையி லெழுந்து நீரா டல்கொஞ்சம்
கர்த்தனை யெண்ணித் துதிபாடல்
மாலையி லோடி விளையா டல்இந்த
மார்க்கத்தை விட்டனர் மக்களெல்லாம் (5)

அளவை யறிந்து புசிப்பதில் லைதங்கள்
அளவை யளந்து வசிப்பதில்லை
களவுக்குப் பின்னல் கதவை அடைப்பவர்
காரியம்போலடி கண்மணியே (6)

நல்ல வழக்கங்கள் உள்ளவர் தங்களை
நாடுமோ நோவுகள் எந்நாளும்
நல்ல வழக்கங்கள் நாளும் வளர்ந்தினி
நாடுசெழித்திட வேணுமடி (7)

## சத்தியம் சாந்தம்

1. சத்தியம் நிலைக்குமென்று சங்கூதுவோம்
சாந்தமே ஜயிக்குமென்று சங்கூதுவோம்
நித்தியம் கடவுளென்று சங்கூதுவோம்
நீர்க்குமிழாம் வாழ்க்கையென்று சங்கூதுவோம் (சத்)

2. நீதியே நிலைக்குமென்று சங்கூதுவோம்
நியாயமே கெலிக்குமென்று சங்கூதுவோம்
வாதுசூது பொய்ம்மையாவும் ஒன்றொன்றாய்
வம்புகொண்டு மறையுமென்று சங்கூதுவோம் (சத்)

3. புண்ணியம் பலிக்குமென்று சங்கூதுவோம்
பொறுமையே கெலிக்குமென்று சங்கூதுவோம்
மண்ணிற்செய்த நன்மைதீமை யல்லாமலே
மற்றதொன்றும் மிச்சமில்லை என்றூதுவோம் (சத்)

4. தருமமே நிலைக்குமென்று சங்கூதுவோம்
தானமே தழைக்குமென்று சங்கூதுவோம்
கருமமே சிறக்குமென்று சங்கூதுவோம்
கடவுளுண்மை வடிவமென்று சங்கூதுவோம் (சத்)

5. உண்மையைக் கடைப்பிடித்து யர்ந்தோர்களை
உலகமோசம் என்னசெய்யும் என்றூதுவோம்
தண்மையான சாந்திபெற்ற தக்கோர்முனே
சஞ்சலங்கள் ஓடுமென்று சங்கூதுவோம் (சத்)

6. கோபமற்றுக் குணமிகுந்த நல்லோர்முன்னால்
கூர்மழுங்கும் ஆயுதங்கள் என்றூதுவோம்
பாபமற்ற வாழ்க்கையுள்ள பண்பாளரைப்
பயமுறுத்த ஒன்றுமில்லை என்றூதுவோம் (சத்)

7. அன்புகொண்டு ஆசையற்ற நல்லார்களை
அரசனும் வணங்குமென்று சங்கூதுவோம்
வம்புதுன்பம் வஞ்சமாயம் எல்லாமிதோ
வழிகொடுத்து விலகுமென்று சங்கூதுவோம் (சத்)

8. கொல்லுகின்ற தில்லையென்ற நல்லோர்கள்பேர்
குவலயத்தில் வாழுமென்று சங்கூதுவோம்
வெல்லுகின்ற போதுமாசை விட்டார்களே
வீரதீர சூரரென்று சங்கூதுவோம் (சத்)

9. ஆன்மசக்தி கண்டுகொண்ட அன்பாளரை
அடிமையாக்க யாருமில்லை என்றூதுவோம்
'தான்' மறந் தகந்தைவிட்ட தக்காரையே
தலைவணங்கும் உலகமென்று சங்கூதுவோம் (சத்)

10. சாந்திசாந்தி சாந்தியென்று சங்கூதுவோம்
சாத்திரங்கள் முடிவிதென்று சங்கூதுவோம்
காந்திகாந்தி காந்தியென்று நம்நாட்டிலே
கால்நடக்கும் ஞானமென்று சங்கூதுவோம் (சத்)

## கைத்தொழில்

### இராட்டினப் பாட்டு

('ஆடுபாம்பே' என்ற பாம்பாட்டி சித்தர் பாடல் மெட்டு)

பல்லவி

ஆடுராட்டே சுழன் றாடுராட்டே

அநுபல்லவி

சுழன்று சுழன்றுசுழன் றாடுராட்டே—இனிச்
சுகவாழ்வு வந்ததென்று ஆடுராட்டே (ஆடு)

சரணங்கள்

1. பாபங் குறையுமென்று ஆடுராட்டே இனிப்
பயங்கள் மறையுமென்று ஆடுராட்டே
கோபங் குறையுமென்று ஆடுராட்டே நல்ல
குணங்கள் மிகுந்தவென்று (ஆடு)

2. மேலான ஜாதியென்று மிக்குப்பேசி மிக
மாறான காரியங்கள் செய்துவாழும்
மாலான ஜனங்களின் வஞ்சனையெல்லாம் இனி
மாண்டு மடியுமென்று ஆடுராட்டே (ஆடு)

3. ஏழைகள்கண் ணீர்சொரிய மிக்குவருத்திப் பல
எத்துகள்செய் தேபிழைக்கும் மனிதரெல்லாம்
வாழமுடி யாதினிமேல் வஞ்சனையினால் அவர்
வாழ்க்கை திருந்துமென்று ஆடுராட்டே (ஆடு)

4. பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தங்குடிசை நிழலிருந்து நூல்
இழைத்துப் பிழைப்ப ரென்று ஆடுராட்டே (ஆடு)

5. கள்ளுபீர் சாராயம் காமவகைகள் கெட்ட
கஞ்சா அபின்களெல்லால் ஓடியொளிக்கப் .
பிள்ளைகுட்டிப் பெண்ஜாதி வயிறூர உண்ணப்
பெற்றதே சுதந்தரமென் றாடுரோட்டே (ஆடு)

6. உழுது நெய்துபல தொழில்செய்து பொருள்
உதவும் வாணிபமும் முயல்வதல்லால்
தொழுது பணிபுரியும் தொழில்களெல்லாம் இனித்
தோல்வி யடையுமென் றாடுரோட்டே (ஆடு)

7. கைநூலைக் கைத்தறியில் நெய்ததுணிதான் நாம்
கட்டும் உடைகளெனத் திட்டமானால்
வெய்தான வேலையில்லாத் திண்டாட்டம் நம்மை
விட்டொழியும் என்றுசொல்லி ஆடுரோட்டே (ஆடு)

## கைத்தொழிலைக் காப்போம்

(இங்கிலீஷ் நோட்—வேறுமாதிரியும் பாடலாம்.)

(1) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருப்ப துனக்கே சரியாமோ (கை)

(2) உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ (கை)

(3) காட்டிலும் மேட்டிலும் களைப்போடு
கஷ்டப் படுவோர் உழைப்பின்றி
வீட்டினில் சாதம் வெந்திடுமோ
வேறெதும் உணவைத் தந்திடுமோ (கை)

(4) நெசவுக் கரரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள்
குசவன் செய்திடும் பாண்டமன்றே
குடித்தனம் நடத்திட வேண்டுமென்றும் (கை)

(5) கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி (கை)

(6) சலவை சவரம் செய்தாலும்
சாக்கடை கழுவுதல் எய்தாலும்
உலகுக் கதனல் உபகாரம்
ஒன்றும் தெரியார் வெறும்பாரம் (கை)

(7) வேந்தர்கள் வரிப்பணம் வாங்குவதும்
வீரர்கள் வெற்றிகள் தாங்குவதும்
மாந்தர்கள் செய்யும் எத்தொழிலும்
மண்ணிற் சிறப்பது கைத்தொழிலால் (கை)

(8) எந்திர வேலைகள் சிறந்திடவும்
ஏற்றவன் கைத்தொழில் தெரிந்தவனே
மந்திரத் தால்எதும் வந்திடுமோ
மனிதன் செய்தது எந்திரமும் (கை)

(9) வேலையில் லாதவர் திண்டாட்டம்
விளைத்திடும் கலகக் கொண்டாட்டம்
ஆலைகள் எந்திரச் சாலைகளால்
அதிகப் படுவதை அறிவோமே (கை)

(10) கைத்தொழில் காத்திடும் ஒருநாடே
கலகம் குறைந்துள திருநாடாம்
எத்தனைக் கெத்தனை எந்திரமோ
அத்தனைக் கத்தனை தொந்தரவே (கை)

11. கைத்தொழில் தம்மைக் காத்திடுவோம்
கலகம் பற்பல தீர்த்திடுவோம்
பொய்த்தொழில் யாவும் குறைந்திடவே
பூமியில் நாமே சிறந்திடுவோம் (கை)

12. ஏழை செல்வன் என்றுவரும்
எல்லாப் பிணக்கும் நின்றுவிடும்
வாழிய வாழிய கைத்தொழில்கள்
வாழிய நித்திய சத்தியமும் (கை)

## வாழி

வாழ்க வாழ்க உலகெலாம்
வாழ்க எங்கள் தேசமும்
வாழ்க எங்கள் தமிழகம்
வாழ்க எங்கள் மனையறம்
வாழ்க மேழிச் செல்வமே
வளர்க நாட்டுக் கைத்தொழில்
வாழ்க எங்கள் வாணிபம்
வாழ்க நல்ல அரசியல்
அன்புகொண்டு அனைவரும்
அச்சமின்றி வாழ்கவே
துன்பமான இன்றிகம்
துக்கம் யாவும் நீங்கியே
இன்பமான யாவு மெய்தி
இந்தநாட்டில் யாவரும்
தெம்பினோடு தெளிவுபெற்றுத்
தேவர்போற்ற வாழ்குவோம்.

45636 O31,1M88,P HO

---

THE B. N. PRESS, MADRAS.